[திரு. எடப்பாடி கே. பழனிசாமி] [2019 ஜூலை 20

நான் தெரிவித்துவிட்டேன். மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் அதனைக் கவனிக்கவில்லை என்று கருதுகிறேன். என்னுடைய பதிலுரையிலேயே, 23 ஆண்டு காலம் பணியாற்றிய NMR, 12 ஆண்டு காலம் பணியாற்றிய NMR–களையெல்லாம் பணி நிரந்தரம் செய்வதற்காக கோப்புகள் அரசிடம் வரப்பெற்றிருக்கின்றன என்றும், அவர்களுக்கெல்லாம் பணி நிரந்தரம் செய்யப்படும் என்பதையும் பொதுப் பணித் துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை மானியக் கோரிக்கைகளின்மீதான விவாதத்தின்போது அளிக்கப்பட்ட என்னுடைய பதிலுரையில் நேற்றே நான் அறிவித்துவிட்டேன். (மேசையைத் தட்டும் ஒலி)

திரு. துரைமுருகன்: நான் பதிலுரையைக் கவனித்தேன். இருந்தாலும், இன்றைக்கு கடைசி நாளில் மறுபடியும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய வாயால் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகச் சொன்னேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10—30

(ஆ) அணைகள் பாதுகாப்பு மசோதாவை மத்திய அரசு மீண்டும் கொண்டு வருதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அணைகள் பாதுகாப்பு சம்பந்தமாக ஒரு பிரச்சினையை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவர நான் விரும்புகிறேன். மாநிலங்களில் இருக்கக்கூடிய அணைகளின் பாதுகாப்பையும் மத்திய அரசு எடுத்துக்கொள்ளக்கூடிய வகையில் அமைச்சரவைக் கூட்டத்தில் அவர்கள் இதை நிறைவேற்றியிருக்கிறார்கள். அணைகள் பாதுகாப்பு மசோதா மீண்டும் கொண்டுவருவது என்பது கூட்டாட்சித் தத்துவத்திற்கே மிகப் பெரிய நெருக்கடியைக் கொடுத்திருக்கிறது என்பதுதான் உண்மை. காவேரி இறுதித் தீர்ப்பைச் செயல்படுத்தாத கர்நாடக அரசின் அணையை அவர்களுடைய கட்டுப்பாட்டில் எடுத்துக்கொள்ள மறுக்கக்கூடிய மத்திய அரசு, இப்போது அனைத்து மாநிலங்களில் இருக்கக்கூடிய அணைகளின் கட்டுப்பாடுகளைப் பாதுகாப்பு என்ற பெயரிலே கைப்பற்றுவதற்கு முயற்சி செய்திருப்பது என்பது வேதனை தரக்கூடிய செய்தியாக அமைந்திருக்கிறது. முல்லைப் பெரியாறு,

பரம்பிக்குளம், தூணக்கடவு, பெருவாரிப்பள்ளம் ஆகிய அணைகள் தமிழகத்திற்குச் சொந்தமானவை. ஆனால், அவை கேரள மாநிலத்தில் இருக்கின்றன. இந்த அணைப் பாதுகாப்பு மசோதாமூலம் தமிழகத்தின் கட்டுப்பாட்டில் இருக்கக்கூடிய மேற்கண்ட அணைகளை பாதுகாப்பில் எடுத்துக்கொள்வது என்பது ஓர் அராஜகமான போக்கு என்பதை நான் இந்த அவையிலே பதிவு செய்ய விரும்புகிறேன்.

அணைகளைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு மாநில அரசினுடைய உரிமை. அதற்குத் தேவைப்பட்டால் மத்திய அரசு நிதியுதவி செய்யலாம். அதைவிடுத்து, அணைகளையே தன்னுடைய கட்டுப்பாட்டில் எடுத்துக்கொள்வது என்பது மத்தியில் இருக்கக்கூடிய அதிகாரத்தைக் குவிக்க வேண்டுமென்ற ஒரே நோக்கத்தோடு இந்த முயற்சியிலே அவர்கள் இறங்கியிருக்கிறார்கள் என்று தெரிகிறது. ஏற்கெனவே இதே அவையிலே அணை பாதுகாப்பு மசோதா குறித்த கவலைகளையெல்லாம் நாம் தெரிவித்திருக்கிறோம். கவலைகளைத் தெரிவித்தது மட்டுமல்ல, தமிழகத்தினுடைய உரிமைகளைப் பாதிக்கும் இந்த மசோதாவை மாநிலங்களோடு கலந்தாலோசிக்காமல் கொண்டுவரக் கூடாது என்று கடந்த 26—6—2018 அன்று இதே அவையிலே தீர்மானத்தையும் நாம் நிறைவேற்றி இருக்கிறோம். ஆனால், தொடர்ந்து சட்டமன்றத்தினுடைய உணர்வுகளையெல்லாம் மதிக்காமல் அணை பாதுகாப்பு மசோதாவை மீண்டும் மத்திய அரசு கொண்டு வருவது வேதனைக்குரிய ஒன்றாக அமைந்திருக்கிறது. ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த மசோதாவை கடுமையாக எதிர்த்து தமிழகத்தினுடைய உரிமைகளை நிலைநாட்ட வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று நான் வலியுறுத்திக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அணை பாதுகாப்பு சட்ட மசோதா சம்பந்தமாக அரசினுடைய கவனத்தை ஈர்த்திருக்கின்றார். அதற்குப் பதில் அளிக்கின்றேன்.

மத்திய அரசு 12—12—2018 அன்று அணை பாதுகாப்பு சட்ட மசோதா, 2018—ஐ நாடாளுமன்ற மக்களவையில் அறிமுகம்

செய்தது. இது தொடர்பாக மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு 14—12—2018 அன்று நான் எழுதிய கடிதத்தில், இந்தச் சட்ட மசோதாவைத் திரும்பப் பெறுமாறு நீர்வளத் துறை அமைச்சகத்திற்கு உத்தரவிடுமாறும், அனைத்து மாநிலங்களும் ஏற்றுக்கொள்ளும் வரை இம்மசோதாவை நிறைவேற்றக் கூடாது என்றும் வலியுறுத்தியுள்ளேன்.

இந்த மசோதாவிற்கு முன்பாக, மத்திய அரசு ஏற்கெனவே வரைவு அணை பாதுகாப்பு சட்ட மசோதா, 2016—ஐ நாடு முழுமைக்கும் பொருந்தும் வகையில் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றுவதற்கு முன்பாக அனைத்து மாநில அரசுகளின் கருத்துகளைக் கோரியது. ஒரு மாநிலத்திற்குச் சொந்தமானதாக இருந்தும், வேறொரு மாநிலத்தில் அமைந்திருக்கும் அணைகளுக்கென தனிப்பட்ட சட்டப் பிரிவு ஏதும் இந்த மசோதாவில் இடம்பெறாததால், இந்த மசோதா தமிழ்நாட்டிற்கு ஏற்புடையதல்ல. எனவே, 11—9—2016 அன்று மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு இந்த மசோதாவை திரும்பப் பெற வலியுறுத்தி கடிதம் எழுதப்பட்டது. 15—6—2018 அன்று மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு மீண்டும் இது தொடர்பாக கடிதம் எழுதப்பட்டது. மேலும், இதே கருத்தினை வலியுறுத்தி 26—6—2018 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு அனுப்பப்பட்டது. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 26—6—2018 அன்று தமிழ்நாட்டு மக்களின் கருத்துகளை வலியுறுத்தி நிறைவேற்றப்பட்ட தீர்மானம் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படவில்லை என்று 14—12—2018 நாளிட்ட கடிதத்தில் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அணை பாதுகாப்பு சட்ட மசோதா, 2018—ன் பிரிவு 23(1)—ன்படி ஒரு மாநிலத்திற்குச் சொந்தமான அணை வேறொரு மாநிலத்தில் அமைந்திருக்கும்பட்சத்தில், அந்த அணை தேசிய அணை பாதுகாப்பு ஆணையத்தின் கட்டுப்பாட்டின்கீழ் வரும். தமிழ்நாட்டிற்குச் சொந்தமான முல்லைப் பெரியாறு, பரம்பிக்குளம், தூணக்கடவு மற்றும் பெருவாரிப்பள்ளம் ஆகிய நான்கு அணைகளும் தமிழ்நாடு மற்றும் கேரளா ஆகிய இரு மாநிலங்களுக்கு இடையேயான ஒப்பந்தங்களின் அடிப்படையில்,

2019 ஜூலை 20] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

தமிழ்நாடு அரசால் கட்டப்பட்டு, இயக்கப்பட்டு, பராமரிக்கப்பட்டு வருகின்றன. இந்நிலையில், இந்த அணைகளை தேசிய அணை பாதுகாப்பு ஆணையத்தின் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவந்து அணையின் மேல் பகுதி மற்றும் கீழ் பகுதியில் அமைந்துள்ள மாநிலங்களின் பிரதிநிதிகளைக் கொண்ட குழுவை அமைப்பது தமிழ்நாட்டின் உரிமைகளில் தலையிடுவதாகும். இது அரசியல் சாசனத்திற்கும், கூட்டாட்சித் தத்துவத்திற்கும் முரணானதாகும். எனவே, அணை பாதுகாப்பு மசோதா, 2018—ன் பிரிவு 23(1)—ஐ, அணை வேறு மாநிலத்தில் அமைந்திருந்தாலும் அந்த அணை எந்த மாநிலத்திற்குச் சொந்தமோ அந்த மாநிலத்தின் மாநில அணை பாதுகாப்பு அமைப்பின் கட்டுப்பாட்டில் இருக்கும்படி திருத்தம் செய்ய வேண்டும் எனவும், முல்லைப் பெரியாறு அணையின் மீதான தமிழ்நாட்டின் உரிமை உச்ச நீதிமன்றத்தின் அரசமைப்பு அமர்வு 7—5—2014 அன்று வழங்கிய தீர்ப்பில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்பதையும் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு 14—12—2018 நாளிட்ட கடிதத்தின் வாயிலாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேலும், அணையைப் பராமரிக்கும் அதிகாரிகள் மற்றும் பணியாளர்களுக்கு அணையின் பாதுகாப்பு மற்றும் பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ள ஏதுவாக, அணை அமைந்துள்ள காடுகள், வன விலங்குகள் சரணாலயத்திற்குள் சென்று வர முழு உரிமை அளிக்கும் வகையில் பிரிவு 23—ன்கீழ் ஒரு துணைப் பிரிவினை கூடுதலாக இந்த மசோதாவில் சேர்க்க வேண்டும் எனவும் 14—12—2018 நாளிட்ட கடிதத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

முற்பகல் 10—35

மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களிடம் 27—1—2019 அன்று அளித்த கோரிக்கை மனுவில் உள்ள பல்வேறு கோரிக்கைகளில் ஒன்றான அணைப் பாதுகாப்பு சட்ட மசோதா, 2018 குறித்து, தனது 15—6—2018 மற்றும் 14—12—2018 ஆம் நாளிட்ட கடிதங்களைச் சுட்டிக்காட்டி, தேசிய அணை பாதுகாப்பு ஆணையம் அமைப்பது மாநிலத்தின் உரிமையில் தலையிடுவதாகும் என்பதைக் குறிப்பிட்டு, அனைத்து மாநிலங்களும் ஏற்றுக்கொள்ளும்வரை அணை பாதுகாப்பு சட்ட மசோதா, 2018—ஐ நிறைவேற்றக் கூடாது என வலியுறுத்தப்பட்டுள்ளது. இதே கருத்து, மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களிடம், 15—6—2019 அன்று அளித்த

[திரு. எடப்பாடி கே. பழனிசாமி] [2019 ஜூலை 20

கோரிக்கை மனுவிலும், மீண்டும் என்னால் வலியுறுத்தப்பட்டது. அணை பாதுகாப்பு சட்ட மசோதா, 2018–ஐ திரும்பப் பெற வைத்து தமிழ்நாட்டின் உரிமையை நிலைநாட்ட தமிழ்நாடு அரசு தொடர்ந்து நடவடிக்கை எடுத்து வருகிறது. அண்மையில் மத்திய அமைச்சரவையின் பொருளாதார கமிட்டி, அணை பாதுகாப்பு மசோதாவிற்கு அனுமதி அளித்ததாக ஊடகங்களில் செய்தி வந்துள்ளது. முன்பு இம்மசோதாவை நாடாளுமன்றத்தில் அறிமுகப்படுத்தியபோது, தமிழ்நாட்டின் உரிமைகளை நிலைநாட்ட அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய பாராளுமன்ற உறுப்பினர்கள் தீவிர எதிர்ப்பினைத் தெரிவித்தனர். அதனால் அந்த மசோதா சட்டமாகவில்லை. முல்லைப் பெரியாறு, பரம்பிக்குளம், தூணக்கடவு மற்றும் பெருவாரிப்பள்ளம் ஆகிய நான்கு அணைகளின் மீதான தமிழ்நாட்டின் உரிமையினை நிலைநாட்ட மாண்புமிகு அம்மாவின் அரசு அனைத்துவிதமான நடவடிக்கைகளையும் தொடர்ந்து எடுக்கும் என்பதை இப்பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை. . . (குறுக்கீடு) இருங்கள், அதுதான். உட்காருங்கள். இன்று இந்தக் கூட்டத் தொடரின் கடைசி நாள். நிறைய உறுப்பினர்கள் கவன ஈர்ப்புத் தீர்மானங்களைக் கொடுத்திருக்கிறீர்கள். அவை துறைகளுக்கு பதில் கேட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. சில பதில்கள் வரப்பெறாதிருந்தாலும் Zero Hour–ல்கூட நான் மாண்புமிகு அமைச்சர்களை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று வற்புறுத்தி, எடுத்துக்கொண்டிருக்கிறோம். இன்றைக்கும், அதேபோல சில விஷயங்களை மாண்புமிகு உறுப்பினர்கள் எழுப்ப, மாண்புமிகு அமைச்சர்களை பதில் சொல்ல கேட்டுக்கொண்டிருக்கிறேன். ஆகவே, பேசுகிற மாண்புமிகு உறுப்பினர்கள் அதிக நேரம் எடுத்துக்கொள்ள வேண்டாம். ஏனென்றால், நான் இன்றைக்கு 2 மணிக்கு எல்லாவற்றையும் guillotine செய்ய வேண்டும். Guillotine செய்த பின்னர், 15 Bills எடுத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. ஆகவே, இவ்வளவும் இருக்கின்ற காரணத்தினாலே, மாண்புமிகு உறுப்பினர்கள் இதைக் கருத்திலேகொண்டு, சுருக்கமாகப் பேசும்படி கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. ஆடலரசன் அவர்கள்.